




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 256 | 10.03.2026 | TUESDAY | MAASI : 26 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 256 | 10.03.2026 | செவ்வாய்கிழமை | மாசி : 26 | விலை : ரூ.5/–


## ஒரே நாடு ஒரே தேர்தல்

# "நோயை விட கொடுமையானது"

## முதல்வர் ஸ்டாலின்

சென்னை: மார்ச்.10-

ஒரே நாடு ஒரே தேர்தல் நோயை விட கொடுமையானது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆங்கில நாளிதழுக்கு முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கட்டுரை: ஒரே நாடு ஒரே தேர்தல் வாக்குரிமையின் மதிப்பைக் குறைக்கிறது. நடுக்காலத் தேர்தல்கள் குறுகிய கால ஆணையைக் கொண்ட அரசுகளை உருவாக்கும்; தேர்தல்கள் இடைக்காலப் பயிற்சிகளாக மாறி, வாக்காளர்களின் அலட்சியத்தை அதிகரிக்கும் அபாயம் உள்ளது.




இரண்டாவது, இது நிர்வாகத்தையும் பொறுப்பையும் பாதிக்கிறது. குறுகிய கால ஆணையைக் கொண்ட அரசுகளுக்கு கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும் ஊக்கம் குறையும்; இதனால் மக்கள் கவரும் அரசியல் மற்றும் கொள்கை திசைதிருப்பங்கள் அதிகரிக்கக்கூடும்.

MCC விதிகள் ஏற்படுத்தும் தற்காலிகக் கட்டுப்பாடுகளை விட, குறைக்கப்பட்ட ஆணைகள் பல ஆண்டுகள் நிர்வாகத்தைப் பாதிக்கக்கூடும். மூன்றாவது, 'நிர்வாக வெற்றிடம்' உருவாகும் அபாயம் உள்ளது. மீதமுள்ள காலம் எவ்வளவு இருந்தால் நடுக்காலத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற குறைந்தபட்ச அளவையே இந்த மசோதா குறிப்பிடவில்லை.

மாநில மட்டத்தில், தேர்தலை ஒத்திவைப்பது ஜனாதிபதி ஆட்சியை நீட்டிக்கக்கூடும்; இது Article 356(5) உடன் முரண்படுகிறது. அந்தப் பிரிவு ஜனாதிபதி ஆட்சியை ஒரு ஆண்டுக்கு மட்டுமே அனுமதிக்கிறது.

தேசிய அவசரநிலை மற்றும் தேர்தல் ஆணையச் சான்று இருந்தால் மட்டுமே மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்க முடியும். தேர்தல்களின் நிதிச் சுமை மொத்த பொருளாதார அளவில் மிகச் சிறியது; இதனைக் காரணமாகக் கொண்டு இவ்வளவு பெரிய அரசியலமைப்பு மாற்றத்தை மேற்கொள்வது நியாயமல்ல.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%க்கும் குறைவான செலவைச் சேமிக்க அரசியலமைப்பைத் திருத்தி கூட்டாட்சியை பலவீனப்படுத்துவது புத்திசாலித்தனமானதா? தேர்தல்கள் குறைக்க வேண்டிய நிர்வாகச் செலவாக அல்ல; அது தன்னாட்சியின் மீண்டும் மீண்டும் செலுத்தப்படும் விலையாகும் அதிகாரம் மக்களிடம் பொறுப்புடன் இருக்கச் செய்வதற்கான கட்டாயமான ஜனநாயகச் செலவாகும்.

ஒரே நாடு ஒரே தேர்தல்' முன்மொழிவால் வாக்குறுதி அளிக்கப்படும் நன்மைகள் மிகைப்படுத்தப்பட்டவை; ஆனால், அதன் கட்டமைப்பு பாதிப்புகள் ஆழமானவை. இது அரசியலமைப்பின் அடையாளத்தையே மாற்றி, அடிப்படை அமைப்புக் கொள்கையை மீறுகிறது.

2019ல் இந்தோனேஷியாவில் செலவுகளைக் குறைத்து நிர்வாகத்தை எளிமைப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி, மனித உயிர்களின் பெரும் இழப்பை ஏற்படுத்தியது.

சுமார் 900 தேர்தல் பணியாளர்கள் உயிரிழந்தனர்; மேலும் 5,000க்கும் மேற்பட்டோர் கடுமையாக உடல்நலக் குறைவு அடைந்தனர். இந்தியா இந்தோனேஷியாவின் தவறை மீண்டும் செய்யக்கூடாது. ஒரே நாடு ஒரே தேர்தல் நோயை விட கொடுமையானது இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## "தமிழகத்தில் எங்கும் கொலை, எப்போதும் கொலை..."

## திமுக அரசு மீது பிஎஸ் சாடல்

சென்னை: மார்ச்.10-

"உங்கள் ஆட்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக கொலைகள் நடக்கவில்லை. எங்கும் கொலை, எப்போதும் கொலைதான் நடக்கிறது. நீங்கள் ஆண்டது போதும்; மக்கள் மாண்டது போதும்" என்று முதல்வர் ஸ்டாலினைக் குறிப்பிட்டு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "நேற்றைய தினம் பவானி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற எழுச்சிப் பயணப் பொதுக் கூட்டத்தில், கடந்த 48 மணி நேரங்களில் நடைபெற்ற பல்வேறு சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்தான செய்திகளைப் பட்டியலிட்டு, திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்குலைந்து விட்டதை சுட்டிக்காட்டினேன்.

இன்றைய தினம் (தற்போது வரை) செய்திகளில் வந்துள்ள "கொலை நிலவரத்தை" சுட்டிக்காட்ட விழைகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகே, முதியவர் கொலை செய்யப்பட்டு, மூதாட்டி மனைவிக்கு பாலியல் வன்கொடுமை, சென்னை திரிசூலத்தில் குடிசையில் தங்கியிருந்த இருவர் படுகொலை, தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே விவசாயி படுகொலை, இப்படி தொடர்ச்சியாக வரும் கொலை செய்திகள், பாலியல் குற்றச் செய்திகள் மக்களிடையே அச்ச உணர்வை அதிகரித்துள்ளது.

முதியோருக்கு வீட்டில் பாதுகாப்பு இல்லை என்பது எவ்வளவு கொடூரமான நிலை? இதற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டிய பொம்மை முதல்வர், கடந்த 5 ஆண்டுகளில் ஒருமுறையாவது சட்டம் ஒழுங்கைப் பற்றி வாய் திறந்து பேசியுள்ளாரா? தென்காசி விவசாயி கொலையில், காவல்துறை ஒருதலைப் பட்சமாக செயல்பட்டது என உயிரிழந்த விவசாயியின் மகன் தெரிவித்துள்ளார்.

குற்றத்திற்கான எச்சரிக்கை இருந்தும் அதை காவல் துறை தடுக்காமல் இருந்ததை எப்படி ஸ்டாலின் நியாயப்படுத்த முடியும்?

ஸ்டாலின் அவர்களே, உங்கள் ஆட்சியில் "அங்கொன்றும் இங்கொன்றுமாக" கொலைகள் நடக்கவில்லை. "எங்கும் கொலை, எப்போதும் கொலை" தான் நடக்கிறது. நீங்கள் ஆண்டது போதும்; மக்கள் மாண்டது போதும்.

மேற்கூறிய வழக்குகளில் குற்றம் இழைத்தோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதல்வரின் திமுக அரசை வலியுறுத்துகிறேன். தனது ஆட்சியின் கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் திமுக அரசு, இருக்கும் கொஞ்ச நாட்களிலாவது சட்டம் ஒழுங்கைக் காக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தவெக தலைவர் விஜய்க்கு சிபிஐ மீண்டும் சம்மன் வேகமெடுக்கும் கரூர் நெரிசல் வழக்கு

புதுடெல்லி: மார்ச்.10-

கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் தவெக தலைவர் விஜய்க்கு சிபிஐ மீண்டும் சம்மன் அனுப்பியுள்ளது. அதன்படி விஜய் நாளை (மார்ச் 10) டெல்லி சிபிஐ அலுவலகத்தில் ஆஜராகும்படி சம்மனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரூரில் கடந்த் ஆண்டு செப்டம்பர் 27 அன்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தேசிய அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக தவெக தலைவர் விஜய் டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் கடந்த 12ம் தேதி ஆஜரானார். அப்போது அவரிடம் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் 19ம் தேதி ஆஜாரக சம்மன் அனுப்பியதைத் தொடர்ந்து அன்றைய தினம் மீண்டும் அவர் ஆஜரானார். அன்று காலை 10.30 மணிக்கு விசாரணை தொடங்கி 6 மணி நேரம் விசாரணை நடைபெற்றது.

அப்போதே விஜய்யின் பெயர் குற்றப்பத்திரிகையில் சேர்ப்பு, விஜய் கைதாக வாய்ப்பு என்றெல்லாம் தகவல்கள் வெளியாகின. ஆனால் ஊகங்கள் பொய்க்க அவர் விசாரணை முடிந்து சென்னை திரும்பினார்.

அதேவேளையில், 2வது முறையாக விஜய் ஆஜரானபோது சில கேள்விகளுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க அவரது தரப்பில் கூடுதல் அவகாசம் கேட்கப்பட்டதால், அவர் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப் படலாம் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில், விஜய் நாளை (மார்ச் 10) டெல்லி சிபிஐ அலுவலகத்தில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து சிபிஐ அலுவலக வட்டாரங்களில், 'கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்தது தொடர்பான விசாரணையில் சில விவரங்கள் கிடைத்துள்ளன. அது தொடர்பாக விஜய்யிடம் மேலும் விசாரித்து, தெளிவு பெற வேண்டியுள்ளது. இதன் நிமித்தமாகவே அவர் மார்ச் 10ல் ஆஜராகும்படி சம்மன் அனுப்பப்பட்டுள்ளது' எனக் கூறப்படுகிறது.

இருப்பினும், இதன் பின்னணியில் அரசியல் அழுத்தங்கள் இருக்கலாமோ என்ற சந்தேகங்களை சிலர் எழுப்பி வருகின்றனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய்யின் தவெக முதன்முறையாகக் களம் காண திட்டமிட்டுள்ளது.

தேர்தல் தேதி அறிவிக்கப்படாவிட்டாலும் திமுக கூட்டணி, அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி உறுதியாகிவிட்ட நிலையில் தவெக தனித்து நிற்கிறது. தவெகவை தங்கள் கூட்டணிக்கு வருமாறு தமிழக பாஜக தரப்பில் காய் நகர்த்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலில் விஜய்க்கு சிபிஐ அலுவலகம் சம்மன் அனுப்பியுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

## தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கம் சார்பில் நலத்திட்ட உதவிகள் அமைச்சர் ஐ பெரியசாமி வழங்கினார்

சின்னாபட்டி, மார்ச்.09

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி பாலாஜி திருமண மண்டபத்தில் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் துவக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, திமுக பேரியத்திற்கு ஆதரவு தரும் விழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



விழாவிற்கு தமிழரசு மக்கள் முன்னேற்ற இயக்க மாநில தலைவர் கிருபாகரன், தலைமை தாங்கினார். மாநில மகளிர் அணி தலைவி கே.எம்.மேகா, துணைத்தலைவி வழக்கறிஞர் கார்த்திகா, மாநில செயலாளர் வி. அருண்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர் .டாக்டர் மலர்விழி வரவேற்று பேசினார் சிறப்பு அழைப்பாளராக விழாவில் கலந்து கொண்டு, நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கி விட்டு அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் பெரியசாமி அவர்கள் இன்று இளைஞர்கள் தங்களுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்பி செல்லும் போது தம்பி கிருபாகரன் மக்களுக்கு சேவை செய்வதற்காக இந்த மக்கள் தன்னரசு முன்னேற்ற இயக்கத்தை ஆரம்பித்துள்ளார். அவர்கள் கட்சியின் ஐந்து கொள்கைகளை திராவிட இயக்கம் நடந்த 70 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது. அதற்காக தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தினர் தங்களுடைய ஆதரவை திமுக என்ற பேரியக்கத்திற்கு கொடுக்க முன்வந்துள்ளனர் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

அனைவருக்கும் எல்லாம் எல்லோருக்கும் எல்லாம் என்ற சமூக நீதிக் கொள்கை உடன் செயல்பட்டு வரும் திமுகவில் மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு தொடங்கிய சுய உதவி குழுக்களுக்கான விதைதான் இன்றுஆலமரம் போல் உயர்ந்து வளர்ந்துள்ளது பெண்களும் சொந்தக்காலில் காலில் நிற்கும் நிலைமை உருவாகியுள்ளது என்றார் விழாவில் கிருபாகரன் அவர்கள் அமைச்சருக்கு பொன்னாடை அணிவித்து கலைஞரின் சிலை மற்றும் வெள்ளி வெள்ளி வால் பரிசாக வழங்கினார்.

நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன் ஒன்றிய செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன் பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட செயலாளர் காமேஷ் நன்றி கூறினார் முன்னதாக அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்களுக்கு தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க நிறுவனத் தலைவர் கிருபாகரன் தலைமையில் ஒயிலாட்டம் ,மயிலாட்டம் மான் ஆட்டம், மயிலாட்டம் கரடியாட்டம் ,பேண்டு வாத்தியங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

## புதுச்சேரியில் ஏழைப் பெண்கள் 63,000 பேருக்கு தலா ரூ.5,000 வரவு வைப்பு

புதுச்சேரி: மார்ச்.10-

புதுச்சேரியில் எந்த உதவித் தொகையும் பெறாத சிவப்பு ரேஷன் அட்டை வைத்திருக்கும் ஏழை குடும்பத் தலைவிகள் 63 ஆயிரம் பேருக்கு 2 மாதங்களுக்கு சேர்த்து ரூ.5 ஆயிரம் வழங்கப்படுகிறது. இத்தொகை இன்று அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.



தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முன்பே, 3 மாதங்களுக்கான மகளிர் உரிமைத் தொகை மற்றும் கோடைக்கால நிவாரணமாக ரூ.2 ஆயிரம் சேர்த்து ரூ.5 ஆயிரத்தை தமிழக அரசு வங்கிக் கணக்கில் செலுத்தியது. சட்டப்பேரவை தேர்தல் நெருங்குவதால் தமிழகத்தைப் பின்பற்றி புதுச்சேரியிலும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. பொங்கல் பண்டிகைக்கு புதுச்சேரியிலும் ரேஷன் கார்டுக்கு ரூ.3 ஆயிரம் வழங்கப்பட்டது. மேலும் ரூ.750 மதிப்புள்ள பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.

புதுச்சேரியில் உள்ள நான்கு பிராந்தியங்களிலும், எந்த நிதியுதவியும் பெறாத சிவப்பு நிற ரேஷன் அட்டை வைத்திருக்கும் ஏழை குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில் மொத்தமுள்ள 63 ஆயிரம் குடும்பத் தலைவிகளுக்கு பிப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய 2 மாதங்களுக்கான மாதாந்திர நிதியுதவி மாதம் தலா ரூ.2,500 வீதம் மொத்தம் ரூ.5 ஆயிரத்தை சேர்த்து வழங்க அரசால் முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி முதல்வர் ரங்கசாமி உத்தரவின்படி, அவரவர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இதற்கு மொத்தமாக ரூ. 31.5 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

# மூத்த பத்திரிகையாளர் பிடிஐ ராமசாமி காலமானார்: முதல்வர், தலைவர்கள் இரங்கல்

சென்னை, மார்ச்.10-
மூத்த பத்திரிகையாளர் பிடிஐ ராமசாமி, சென்னையில் காலமானார். அவரது மறைவுக்கு முதல்வர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிடிஐ செய்தி நிறுவனத்தின் முன்னாள் மண்டல மேலாளரும், மூத்த பத்திரிகையாளருமான எஸ். ராமசாமி (74), சென்னையில் உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.

பத்திரிகையாளர் வட்டாரங்களில் 'எஸ்.ஆர்' என்று அழைக்கப்பட்ட இவர், 1978ல் ஆண்டு பிடிஐ செய்தி நிறுவனத்தின் இணைந்து, 30 ஆண்டுகள் பணியாற்றியவர்.



திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகளின் அரசியல் நகர்வுகளை பதிவு செய்தவர். மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா, கருணாநிதி மற்றும் மூத்த தலைவர்களான ஜி.கே.மூப்பனார் ஆகியோருடன் தனிப்பட்ட முறையில் நட்புறவு கொண்டிருந்தவர்.

அரசியல் வட்டாரத்தில் இவர் பிடிஐ ராமசாமி என்றே அறியப்பட்டார். இவருக்கு மனைவியும், ஒரு மகளும் உள்ளனர். ராமசாமியின் இறுதிச் சடங்குகள் பெசன்ட் நகரில் இன்று நடைபெறுகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தியில், பிடிஐ செய்தி நிறுவனத்தின் மூத்த பத்திரிகையாளர் ராமசாமி மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பிடிஐ ராமசாமி என்று அழைக்கப்படும் அளவுக்கு தமிழகத்தில் பிடிஐ நிறுவனத்தின் அடையாளமாகவே மாறிப்போனார். அவரது மறைவு ஊடகத்துறைக்கு பேரிழப்பாகும் என தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, பாமக தலைவர் அன்புமணி, தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை ஆகியோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்

# காஸ் விலை உயர்வை திரும்பப்பெற கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை, மார்ச்.10-
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் நேற்று வெளியிட்ட அறிக்கை:
சமையல் காஸ் சிலிண்டர் விலை ரூ.60 உயர்த்தப்பட்டுள்ளதால், சங்கிலித் தொடர் போல உணவுப் பொருட்களின் விலை பல மடங்கு உயரும்.

பெட்ரோலியம் சார்ந்த அனைத்து எண்ணெய் பொருட்களின் மீதும் இதன் தாக்கம் இருக்கும்.



ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து நடத்தும் போர் காரணமாக சிலிண்டர், பெட்ரோல் உள்ளிட்ட எந்த எரிபொருளுக்கும் தட்டுப்பாடு, இருக்காது என பாஜகவினர் பேசி வந்த நிலையில் சிலிண்டருக்கு ரூ.60 உயர்த்தியிருப்பது கண்டனத்துக்குரியது. விலை உயர்வை உடனடியாக திரும்பப்பெற வேண்டும்.

இ.கம்யூ. மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன்: போர் காரணமாக, காஸ் சிலிண்டர் விலையை எண்ணெய் விற்பனை நிறுவனங்கள் உயர்த்திக் கொண்டதை, மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு இலவச கண் மருத்துவ பரிசோதனை: அகர்வால்ஸ் மருத்துவமனை ஏற்பாடு

சென்னை, மார்ச்.10-
டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் துறை பிராந்தியத் தலைவர் மருத்துவர் சவுந்தரி வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெண்கள் தான் சமூகத்தின் அடித்தளம்.



அவர்களுக்கு பேறு காலத்தின் போதும், மன அழுத்தம் ஏற்படும் போதும் உயர் ரத்த அழுத்த பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை கவனிக்கவில்லை எனில், பார்வையில் தெளிவின்மை, இரட்டை பார்வை, பார்வைத் திறன் பாதிப்புகள் உள்ளிட்டவை உருவாகும். டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் துறை பிராந்தியத் தலைவர் மருத்துவர் சவுந்தரி வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெண்கள் தான் சமூகத்தின் அடித்தளம்.அவர்களுக்கு பேறு காலத்தின் போதும், மன அழுத்தம் ஏற்படும் போதும் உயர் ரத்த அழுத்த பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை கவனிக்கவில்லை எனில், பார்வையில் தெளிவின்மை, இரட்டை பார்வை, பார்வைத் திறன் பாதிப்புகள் உள்ளிட்டவை உருவாகும்.உரிய காலத்தில் பரிசோதனைஅதேபோல், மாதவிடாய் சுழற்சி காலம் நின்றுவிட்டவர்களுக்கும், ஹார்மோன் சுரப்பதில் குறைபாடு ஏற்பட்டு நரம்பு சார்ந்த பாதிப்புகள் பெண்களுக்கு ஏற்படலாம். அதனால், அவர்களுக்கு உரிய காலத்தில் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

அதனை கருத்தில் கொண்டும், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டும், டாக்டர் அகர்வால்ஸ் மருத்துவ குழுமம் சார்பில், டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனைகளில் பெண்களுக்கு இலவச கண் மருத்துவ பரிசோதனைகள் செய்யப்படுகிறது. https://www.dragarwal.com/womens-day2026/ என்ற இணையதளம் மூலம் டிஜிட்டல் முறையில் பரிசோதனை முகாமில் பங்கேற்கலாம். மேலும், 90038 88444 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.எங்களுடைய மருத்துவ குழுவினர், அவர்களை தொடர்பு கொண்டு வரும் 31ம் தேதிக்குள் அருகில் உள்ள டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையில் இலவச பரிசோதனைகள் மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகளை செய்ய தயாராக உள்ளனர். இவ்வாறு மருத்துவர் சவுந்தரி தெரிவித்து உள்ளார்.

# கச்சா எண்ணெய் விலை உயர்வை தடுக்க, தங்கள் நாடுகளின் எண்ணெய் இருப்பை சர்வதேச சந்தையில் விற்க G7 பரிசீலனை

கச்சா, மார்ச்.10-
கச்சா எண்ணெய் விலை உயர்வை தடுக்க, தங்கள் நாடுகளின் எண்ணெய் இருப்பை சர்வதேச சந்தையில் விற்க ஜி7 பரிசீலனை செய்து வருகிறது. ஜி7 நாடுகளின் சுமார் 30% எண்ணெய் இருப்பை (400 மில்லியன் பீப்பாய்கள்) சந்தையில் விற்க திட்டம் என தகவல். இச்செய்தி வெளியான 2 மணி நேரத்தில் எண்ணெய் விலை $15 சரிந்து $105க்கு கீழ் வர்த்தகமாகிறது.




# லெபனானில் 'வெள்ளை பாஸ்பரஸ்' பயன்படுத்தி இஸ்ரேல் தாக்குதல்: மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

பெய்ரூட், மார்ச்.10-
லெபனான் நாட்டின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள் மீது இஸ்ரேல் வெள்ளை பாஸ்பரஸை கொண்டு அண்மையில் தாக்குதல் நடத்தியதாக சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் இயங்கி வரும் அமெரிக்காவின் நியூயார்க்கை தலைமையிடமாக கொண்டுள்ள மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு (ஹெச்.ஆர்.டபிள்யூ) வைத்துள்ளது. அது குறித்து விரிவாக பார்ப்போம்.



கடந்த வாரம் 3ம் தேதி அன்று இஸ்ரேல் தரப்பு லெபனான் மீது நடத்திய தாக்குதலில் வெடி மருந்துகளில் வெள்ளை பாஸ்பரஸை பயன்படுத்தி இருந்ததாக ஹெச்.ஆர்.டபிள்யூ தெரிவித்துள்ளது. இது நச்சுத்தன்மை வாய்ந்தது என்றும், போர் குற்றம் என்றும் குற்றச்சாட்டு வைத்துள்ளது.

இதை புவியியல் சார்ந்த படங்கள் மூலம் சரிபார்த்து உறுதி செய்துள்ளதாக ஹெச்.ஆர்.டபிள்யூ தெரிவித்துள்ளது. காற்றில் வெள்ளை பாஸ்பரஸ் படிமங்கள் இருந்ததாகவும் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் லெபனானின் தெற்கு பகுதியில் உள்ள யோஹ்மோர் நகரில் நடந்துள்ளது. இதில் இரண்டு வீடுகள் மற்றும் ஒரு கார் தீப்பிடித்து எரிந்துள்ளது. அதை அணைக்கும் பணியில் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் ஈடுபட்டதாகவும் ஹெச்.ஆர்.டபிள்யூ கூறியுள்ளது.

ஆக்ஸிஜனுடன் வெள்ளை பாஸ்பரஸ் தொடர்பு கொள்ளும்போது தீ பற்றும் என தகவல். இது போர் களத்தில் புகைத்திரை மற்றும் இருள் கொண்ட வானை ஒளிரச் செய்யவும் பயன்படுத்தப்படும் என தகவல். இதனால் பயங்கரமான தீக்காயங்கள், சுவாசக்கோளாறு, உடல் உறுப்பு செயலிழப்பு மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் என சொல்லப்படுகிறது. இது நச்சுத்தன்மை மிகுந்தது என தகவல்.

"குடியிருப்பு பகுதிகள் மீது இஸ்ரேல் ராணுவம் வெள்ளை பாஸ்பரஸை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியது சட்ட விரோதமானது. இது பொதுமக்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த வகை தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டும். மேலும், இஸ்ரேலுக்கு வெள்ளை பாஸ்பரஸ் கலந்த வெடிமருந்து மற்றும் ஆயுதங்களை இஸ்ரேல் ராணுவத்துக்கு விநியோகிக்கும் அரசுகள் அதைக் கைவிட வேண்டும். மேலும், குடியிருப்பு பகுதிகளில் இந்த தாக்குதல் கூடாது என இஸ்ரேலுக்கு அழுத்தம் தர வேண்டும்" என்று லெபனானை சேர்ந்த ஹெச்.ஆர்.டபிள்யூ ஆய்வாளர் ராம்ஸி கைஸ் கூறியுள்ளார்.

கடந்த 2024ல் இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. இருப்பினும் அந்த நாட்டின் பயங்கரவாத அமைப்பான ஹிஸ்புல்லாவை குறிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது இஸ்ரேல். கடந்த வாரம் ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் மேற்கொண்டது. தற்போது இது போராக மேற்கு ஆசியாவில் தொடர்கிறது.

இந்த சூழலில் லெபனான் மீதும் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. லெபனானில் உள்ள லித்தானி ஆற்றின் தெற்கு பகுதியில் வசித்து வரும் மக்கள் இடம் பெயர்ந்து செல்லுமாறு தொடர்ச்சியாக இஸ்ரேல் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த பகுதி இஸ்ரேலின் வட திசை எல்லை பகுதியில் இருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

# காட்பாடியில் எம்ஜிஆருக்கு ரூ.3 கோடியில் கோயில்: கும்பாபிஷேக விழா நடத்திய முரட்டு பக்தர்

காட்பாடி, மார்ச்.10-
முன்னாள் முதல்வர் மறைந்த எம்ஜிஆருக்கு காட்பாடியில் ரூ.3 கோடியில் கோயில் கட்டப்பட்டு நேற்று கும்பாபிஷேக விழா நடைபெற்றது.





வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த கரசமங்கலத்தில் மும்மத அடையாளங்களுடன் முன்னாள் முதல்வர் எம்ஜிஆருக்கு ரூ.3 கோடி செலவில் கோயில் கட்டப்பட்டுள்ளது.

ராமச்சந்திரா அறக்கட்டளையின் நிர்வாகி டி.ஆர்.முரளி சார்பில் கட்டப்பட்டுள்ள இக்கோயிலின் கோபுரங்கள் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மும்மதங்களை அடையாளப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், கோயிலுக்குள் ரூ.17 லட்சம் மதிப்பில் ஐம்பொன்னாலான எம்ஜிஆரின் முழு உருவச்சிலையும் நிறுவப்பட்டுள்ளது. இந்த கோயில் கும்பாபிஷேக விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.


இதையொட்டி, கடந்த இரண்டு நாட்களாக யாகசாலைகள் அமைத்து விக்னேஷ்வர பூஜை, வருண பகவான் பூஜை, வாஸ்து சாந்தி, கணபதி ஹோமம் உள்ளிட்ட ஹோமங்கள் நடைபெற்றன.

நேற்று அதிகாலை இரண்டாம் கால பூஜை நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் கோபுரத்துக்கும், எம்ஜிஆர் சிலைக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து,

எம்ஜிஆர் சிலைக்குச் சிறப்புப் பூஜைகளும் நடைபெற்றன. இதில், சென்னை முன்னாள் மேயர் சைதை துரைசாமி, தொழிலதிபர் சேகர் ரெட்டி, பொதுமக்கள் மற்றும் எம்ஜிஆர் ரசிகர்கள் பலர் பங்கேற்றனர்.

# தெலங்கானா தியேட்டர்களில் பார்க்கிங் கட்டணம் ரத்து

ஐதராபாத், மார்ச்.10-
தெலங்கானா தியேட்டர்களில் வாகனங்களுக்கு வசூலிக்கப்படும் பார்க்கிங் கட்டணத்தை ரத்து செய்து உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது. சினிமா டிக்கெட் வாங்கிய ரசிகர்கள் தனியாக பார்க்கிங் கட்டணம் வசூலிப்பது சட்டத்திற்கு புறம்பானது என நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார்.






# பெண் தொழில்முனைவோர்கள் உதயம் 7 பெண்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி ஆட்சியர் பாராட்டு

சங்கரன்கோவில், மார்ச். 10-
தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் நபார்டு (NABARD) நிதி உதவியுடன், சங்கை கோமதி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் மகளிருக்கான 'வாழை நார் கூடை தயாரிக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி' கடந்த 35 நாட்களாக நடைபெற்றது. இப்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த 7 பெண் உறுப்பினர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

விழாவில் பேசிய மாவட்ட ஆட்சியர், "பெண்கள் தொழில் முனைவோர்களாக உருவெடுப்பதற்கு இதுபோன்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மிகவும் அவசியம். இப்பயிற்சியின் மூலம் பெற்ற அனுபவத்தைப் பயன்படுத்தி, பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற்று சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும்" என வாழ்த்தினார்.

*முக்கிய ஒப்பந்தம் (MoU):*

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, சங்கை கோமதி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் TASS ஆகியவற்றுக்கு இடையே, உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்குவது குறித்த ஒப்பந்தம் (MoU), மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் கையெழுத்தானது.

நிகழ்வில், மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் மாரியம்மாள், வேளாண் வணிக துணை இயக்குநர் எழில், நபார்டுDDM சசிகுமார், முன்னோடி வங்கி மேலாளர் கணேசன், திலிசி மகாலிங்கம் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பேயை பார்த்து பயப்படுவதை விட்'ஏஜ'யை பார்த்து பயப்படுவது அதிகமாகிவிட்டது: நடிகர் சந்தானம் பேச்சு

சென்னை, மார்ச்.10-
பேயை பார்த்து பயப்படுவதை விட 'ஏஜ்'யை பார்த்து பயப்படுவது அதிகமாகிவிட்டது என நடிகர் சந்தானம் கலகலப்பாகப் பேசினார். சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் துறை சார்பில், இணையவழி (சைபர்) குற்றத் தடுப்பு விழிப்புணர்வு பேரணி மெரினா கடற்கரை, உழைப்பாளர் சிலையிலிருந்து கண்ணகி சிலை வரை நேற்று நடைபெற்றது.




இதில் நடிகர் சந்தானம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேரணியைத் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் நடிகர் சந்தானம் பேசியதாவது: முன்பெல்லாம் வீட்டுக்குள் புகுந்து திருடுவாங்க. இப்போது வீடியோ கால் மூலமாகவே திருட ஆரம்பிச்சிட்டாங்க.

இந்த எல்லா குற்றங்களும் நம்ம கையில் இருக்கும் இந்த போன் மூலம் தான் ஆரம்பிக்கிறது. இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப், ஃபேஸ்புக் என்று நிறைய செயலிகளை பயன்படுத்துகிறோம். போனை வைத்துக் கொண்டு நாம் சும்மா இருப்பதில்லை. வாழைக்காய் பஜ்ஜி போடுற மாதிரி எப்ப பாத்தாலும் போனை தடவிக்கொண்டே இருக்கிறோம்.

இதை தெரிந்து கொண்டுதான் சைபர் குற்றவாளிகள் நம்மை ஏமாற்றுகிறார்கள். இப்போது பேயைப் பார்த்து பயப்படுவதை விட, ஏஜயை பார்த்து பயப்படுவது அதிகமாகிவிட்டது. எனவே, சைபர் மோசடிகள் தொடர்பாக பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அதையும் மீறி சைபர் மோசடி நடைபெற்றால் 1930 என்ற இணைய குற்ற உதவி மைய எண்ணைத் தொடர்புகொண்டு உடனடியாக தகவல் அளிப்பது மிகவும் அவசியம். மேலும், சைபர் மோசடி புகார்களை www.cyber-crime.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாகவும் பதிவு செய்யலாம். அனைவரும் விழிப்புணர்வுடன் இருந்தால் மட்டுமே சைபர் குற்றங்களை முற்றிலுமாக தடுக்க முடியும் என்றார்.

துணை ஆணையர் ஸ்ரீநாதா பேசுகையில், "2025 ஜன. 1 முதல் 2026 பிப்.28 வரை 3,692 இணையவழி குற்றம் சார்ந்த புகார்கள் பெறப்பட்டு, 208 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, குற்றவாளிகள் 164 பேர் கைது செய்யப்பட்டனர்" என்றார்.

பேரணியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் இணையதள குற்றங்கள், ஆன்லைன் வர்த்தக மோசடி, டிஜிட்டல் கைது மோசடி, இணைய வழியில் மிரட்டி பணம் பறிப்பு மோசடி மற்றும் சமூக வலைதளங்களை பொறுப்புடன் கையாள்வது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி சென்றனர்.

இந்நிகழ்ச்சியில், சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் கார்த்திகேயன் (போக்குவரத்து), மத்திய குற்றப்பிரிவு, துணை ஆணையர் கீதாஞ்சலி உட்பட பலர் பங்கேற்றனர்.

# ராமநாதபுரம் ஆன்லைன் பண மோசடி வழக்கில் காவலர் உட்பட 7 பேர் கைது



ராமநாதபுரம், மார்ச்.10-

ஆன்லைன் மூலம் பல கோடி ரூபாய் மோசடி செய்த வழக்கில் போலீஸ்காரர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர். சென்னையில் கடந்த 2025ம் ஆண்டு ஆன்லைன் மோசடியில் பல கோடி ரூபாய் இழந்ததாக சிலர் அளித்த புகாரின்பேரில் சென்னை சைபர் கிரைம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை செய்தனர்.

இந்த வழக்கில், சென்னையைச் சேர்ந்த முக்கிய குற்றவாளிகளை போலீஸார் கைது செய்தனர். மேலும், மோசடி பணத்தை போலி வங்கிக் கணக்குத் தொடங்கி பணப்பரிவர்த்தனை செய்தது தெரியவந்தது.அதில் ராமநாதபுரம் புல்லங்குடியைச் சேர்ந்த தமிழ்நாடு சிறப்புக் காவல் படை போலீஸார் பிரதீப், போகலூரைச் சேர்ந்த அப்ரின், சேதுபாண்டியன், சல்மான் கான், சத்திரக்குடியைச் சேர்ந்த தவமுருகன், முகேஷ்வரன், பரமக்குடியைச் சேர்ந்த ஆசிக் சமூதீன் ஆகிய 7 பேரின் வீடுகளில் சென்னை சைபர் கிரைம் ஆய்வாளர் தலைமையிலான போலீஸார் திடீர் சோதனை நடத்தினர்.இதில் 10க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்கு புத்தகங்கள், ஏடிஎம் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், 7 பேர் பயன்படுத்தி வந்த கார், இரு சக்கர வாகனங்கள், சொத்து ஆவணங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த 7 பேரையும் போலீஸார் கைது செய்து சென்னை சைபர் கிரைம் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

# அருந்ததியர் சமுதாய மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி



சின்னாளபட்டி, மார்ச்.10-

முத்தமிழ் அறிஞர் கலைஞர், திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் அருந்ததியர் சமுதாய மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்ததோடு, சின்னாளபட்டி பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு சொந்த செலவில் வீட்டுமனை வழங்குவேன் என அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார்.

30 வருடங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட வீடுகளில் வசித்து வரும் தூய்மை பணியாளர்கள் தங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கவேண்டுமென ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். இது தவிர முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் அழகர்சாமி தலைமையில் தூய்மை பணியாளர்கள் அமைச்சர் அவர்களை சந்தித்து இடவசதி குறித்து கேட்டபோது அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர், திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் அருந்ததியர் சமுதாய மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன், சொன்ன வாக்கை காப்பாற்றுவதில் நான் பின்வாங்க மாட்டேன். உங்களுக்கு விரைவில் நீங்கள் குடியிருக்கும் பகுதி அருகே இடத்தை வாங்கி அதில் உங்களுக்கு வீடு கட்டித்தருவேன் என உறுதி அளித்தார். நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, ஆத்தூர் தொகுதி தேர்தல் பொருப்பாளர் கள்ளிப்பட்டி மணி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், திமுக நிர்வாகிகள் அம்பைரவி, குமரேசன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், 8வது வார்டு மார்க்கெட் சக்திவேல், 7வது வார்டு திமுக நிர்வாகி நரசிங்கம் உட்பட பலர் உடன் இருந்தனர்.

# நேபாள ஜென்ஸீ போராட்டம்: அரசிடம் அறிக்கை சமர்ப்பிப்பு



காத்மாண்டு, மார்ச்.10-

நேபாளத்தில் நடைபெற்ற ஜென் இஸட் இளைஞர்கள் போராட்டம் தொடர்பான அறிக்கை, இடைக் கால அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் பிரதமரும், சிபிஎன்யுஎம்எல் கட்சித் தலைவருமான கே.பி. சர்மா ஒளியை வீழ்த்தி, ராஷ்ட்ரீய சுதந்திர கட்சியின் இளம் தலைவர் பாலேந்திர ஷா பாலன் (35) வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜென் இஸட் இளைஞர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து பதவி விலகிய கே.பி.சர்மா ஒளியை எதிர்த்து, ஜாப்பா5 தொகுதியில் ராஷ்ட்ரீய சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளர் பாலேந்திர ஷா பாலன் போட்டியிட்டார். 'ராப்' இசைக் கலைஞரான பாலேந்திர ஷா பாலன், காத்மாண்டு நகர மேயராக இளைஞர்களின் நன்மதிப்பை ஏற்கெனவே வென்றவர். விரைவில் இவர் பிரதமர் பதவியை ஏற்கவுள்ளார்.

நேபாள அரசின் ஊழல் மற்றும் சமூக ஊடக தடைகளுக்கு எதிராக கடந்த ஆண்டு செப்டம்பரில் இளைஞர்கள் (ஜென் இஸட்) போராட்டத்தில் குதித்தனர். இந்த ஜென் இஸட் போராட்டம் நாடு முழுவதும் தீவிரமடைந்து வன்முறை வெடித்தது. அரசு கட்டிடங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது மொத்தம் 76 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து கே.பி.சர்மா ஒளி பதவி விலகினார். இடைக்கால பிரதமராக சுசீலா கார்கி நியமிக்கப்பட்டார்.

அடுத்த கட்ட நடவடிக்கை இந்தப் போராட்டம் தொடர்பாக உயர்நிலைக் குழு விசாரணை நடத்த இடைக்கால அரசு உத்தரவிடப்பட்டது. அந்த விசாரணை முடிந்த நிலையில், நேபாள இடைக் கால அரசிடம் அறிக்கையை விசாரணை கமிஷன் நேற்று சமர்ப்பித்துள்ளது.

சிங்தர்பார் பகுதியில் அமைந்துள்ள பிரதமர் வீட்டில் இடைக்கால பிரதமர் சுசீலா கார்கியிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# சாலை விரிவாக்கப் பணிகளை விரைந்து முடிக்க நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளிடம் அமைச்சர் ஐ.பெரியசாமி கண்டிப்பு

சின்னாளபட்டி, மார்ச். 10-

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட முத்தனம்பட்டி நெடுஞ்சாலைப் பகுதியிருந்து சில்வார்பட்டிக்கு ஊராட்சிக்கு செல்லும் சாலை ரூ. 12 கோடி மதிப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் சாலை விரிவாக்கப் பணிகள் தாமதமாக நடைபெற்று வருவதுடன் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு வருவதுடன் சாலை விரிவாக்கப் பணிகளின்போது குடி தண்ணீர் விநியோகம் செய்யப்படும் குழாய்கள் பல இடங்களில் சேதமடைந்ததால், குடி தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது.

சில்வார்பட்டி ஊராட்சிக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளரை நேரில் அழைத்து ஏன் பணிகளை தாமதமாக செய்கிறீர்கள், இதனால் போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர். சாலை விரிவாக்கப் பணிகளை விரைவில் முடிக்க முடியாதா, என கேள்வி எழுப்பியதுடன், இரவு பகல் தொடர்ந்து விரிவாக்கப் பணிகளை செய்ய வேண்டும் என்றார். கோடை காலம் நெருங்கி வருகிறது. பொதுமக்களுக்கு குடி தண்ணீர் தேவை அத்தியாவசியமாகிறது. பணிகள் தாமதமாக நடைபெற்றால் தோண்டிய பள்ளங்களை மூடிவிட்டு குடி தண்ணீர் குழாய்களை பதித்து பொதுமக்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

அமைச்சருடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.கங்காதரணி, கிழக்கு திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாக பொறியாளர் அம்சபிரியா, சில்வார்பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் தனலெட்சுமி இராமமூர்த்தி, ஊராட்சி செயலாளர் இராஜேந்திரன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை சிறப்பு நிலை பேரூராட்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ₹15 இலட்சம் மதிப்பில் புதிய பொதுக் கழிப்பிடம் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. உடன்குடி மெயின் ரோடு, நேருஜி கலையரங்கம் அருகில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் ஜான்சிராணி தலைமை வகித்தார். துணை தலைவர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். மேலும் வார்டு உறுப்பினர்கள் பிரேம் குமார், சண்முகவேல், முத்துகுமார் ஆகியோரும், கவுன்சிலர்கள் பிரதிப், ஸ்வீட் முருகானந்தம், மணலி ராஜா, நடராஜன் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு புதிய வசதியை வரவேற்றனர்.




## வணிக கேஸ் சிலிண்டர் விநியோகம் விவகாரத்தில் தலையிட

# பிரதமர் மோடிக்கு சென்னை ஓட்டல்கள் சங்கம் கடிதம்

சென்னை, மார்ச்.10-

வணிக கேஸ் சிலிண்டர் விநியோகம் விவகாரத்தில் தலையிட பிரதமர் மோடிக்கு சென்னை ஓட்டல்கள் சங்கம் கடிதம் அனுப்பியுள்ளனர். வணிக சிலிண்டர் தட்டுப்பாடு ஹோட்டல் துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என உரிமையாளர்கள் அச்சமடைந்துள்ளனர். சிலிண்டர் தட்டுப்பாட்டால் மருத்துவமனை, ஐ.டி. பார்க், மாணவர் விடுதிகள், பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுவர். வணிக சிலிண்டர் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டதாக ஓட்டல்கள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது. மேலும் 'வணிக கேஸ் சிலிண்டர் தடையின்றி கிடைப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். ஓட்டல்களுக்கு விநியோகம் செய்யப்படும் சிலிண்டர்கள் எந்தத் தடையும் இன்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்' எனவும் சென்னை ஓட்டல்கள் சங்கம் கோரியுள்ளது.




■ கிருட்டினகிரி மாவட்ட அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக R.C பாத்திமா சர்ச் வளாகத்தில் அமைந்துள்ள பாத்திமா ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் உலக மகளிர் தின விழா தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாவட்டத் தலைவர் கார்த்திகேயன் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில்மாவட்டச் செயலாளர் இராஜா, மாவட்டப் பொருளாளர் செந்தில்குமார், ஒன்றியத்தின் மாவட்ட துணைத் தலைவர் அஞ்சலா, அங்கன்வாடி பணியாளர்கள் ஒன்றிய மேனாள் மாவட்டத் தலைவர்தேவகி , ஒன்றியத்தின் மாநில செயலாளர் அந்தோணி ஆல்பார்ட் மற்றும் ஒன்றியத்தின் மேனாள் மாவட்டச் செயலாளர் பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.






■ இந்து முன்னணி பேரியக்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் கோவை காரமடை அருகே தென் திருப்பதி நால்ரோடு பகுதியில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்த மாநில செயற்குழு கூட்டத்தில் மாநில மற்றும் கோட்ட பொறுப்பாளர்களால் நெல்லை புறநகர் மாவட்டத்தின் மாவட்ட தலைவராக திசையன்விளையைச் சேர்ந்த விக்னேஷ் நியமிக்கப்பட்டார்.

# ஓபிஎஸ்ஸிடம் ஸ்டாலின் கவனமாக இருக்க வேண்டும்": ஆர்.பி.உதயகுமார் அதிரடிப் பேச்சு



மதுரை, மார்ச். 10-

மதுரை மேற்கு மற்றும் தெற்கு ஒன்றியம் அதிமுக சார்பில், ஓபிஎஸ் ஆதரவாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணையும் விழா அரியூர் பிரிவில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் பேசுகையில், "பதவி சுகத்திற்காகக் கட்சியைத் துரோகம் செய்த ஓபிஎஸ்ஸிடம் முதல்வர் ஸ்டாலின் கவனமாக இருக்க வேண்டும். வரும் சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் அதிமுக வெற்றி பெற்று எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் முதலமைச்சராவார்" என்று குறிப்பிட்டார். திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.நிகழ்வில் பங்கேற்றவர்கள்:மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, முன்னாள் எம்.எல்.ஏக்கள் கருப்பையா, மாணிக்கம், ஒன்றியச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், காளிதாஸ், கொரியர் கணேசன், நகரச் செயலாளர் அழகுராஜ், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் மலர்மன்னன், ராகுல், சுந்தர்ராஜன், சுந்தரராகவன், தொழிலதிபர் விருகை தர்மர், ஆர்.பி.குமார், முத்துகிருஷ்ணன், கௌதம், தண்டலை ஆனந்த் மற்றும் வழக்கறிஞர் காசிநாதன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# விளையாட்டு வீரர்களுக்கு அங்கீகாரம்: துணை முதல்வர் திட்டங்களால் உலகளவில் சாதனை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்



திண்டுக்கல், மார்ச்.10-

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடியில், ரெட்டியார்சத்திரம் தெற்கு மற்றும் மேற்கு ஒன்றியங்களுக்கு உட்பட்ட 110 கிரிக்கெட் குழுக்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தனது சொந்த செலவில் இந்த உபகரணங்களை வழங்கினார்.

விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசிய முக்கிய அம்சங்கள்: துணை முதல்வரின் பங்களிப்பு: "துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்பான திட்டங்களால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருகின்றனர். குக்கிராமத்தைச் சேர்ந்த வீரர்கள் கூட இன்று விளையாட்டுத் துறையில் ஜொலிக்கின்றனர்" என்று அமைச்சர் பெருமிதத்துடன் கூறினார்.

*அரசுப் பணி வாய்ப்பு* : விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணியில் 3 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டதன் மூலம், கிராமப்புற மாணவர்களுக்கும் அரசு வேலையில் சேர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*புதிய விளையாட்டு அரங்கம்: * ரெட்டியார்சத்திரம் மற்றும் ஆத்தூர் ஒன்றியங்களில் அனைத்து விளையாட்டுகளையும் உள்ளடக்கிய மாபெரும் விளையாட்டு அரங்கம் விரைவில் அமைய உள்ளது. இது இப்பகுதி இளைஞர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக இருக்கும்.

விழாவில் அமைச்சரின் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், திமுக மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுப்புலெட்சுமி வள்ளுவதாஸ், கோனூர் திருப்பதி, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் கரிசல்பட்டி பால்ராஜ், அம்மாபட்டி ரவி, மாவட்ட பிரதிநிதிகள் பெருமாள், எல்லை. ராமகிருஷ்ணன், இளங்கோ, கரிசல்பட்டி அமல இளவரசு, ஜோசப், போளியம்மனூர் ராஜ்குமார், உட்பட திமுக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருளானந்து நன்றி கூறினார்.



# நெல்லை மாவட்டம் திசையன்விளை பகவதி அம்மன் கோவில் கொடை விழா

திசையன்விளை, மார்ச். 10-

மார்ச் 1ம் தேதி திருக்கால் நாட்டுடன் தொடங்கி வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வாக, மார்ச் 8ம் தேதி இரவு பகவதி அம்மனுக்குச் சிறப்பு ஊஞ்சல் சேவை நடைபெற்றது.

முன்னதாக சித்தி விநாயகர், பகவதியம்மன், சுடலை மாடசாமி மற்றும் மங்களமூர்த்தி சுவாமிகளுக்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரம் மற்றும் சோடஷ தீபாராதனை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் அமர்ந்திருந்த பகவதியம்மனுக்கு வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு ஊஞ்சல் சேவை நடத்தப்பட்டது. பின்னர் பெண்கள் அனைவரும் பகவதியம்மனைச் சுற்றி கும்மியடித்து கும்மிப்பாடல் பாடி வழிபாடு செய்து பக்தி பரவசத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி நிறைவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், பெண் அரசு அலுவலர்களுடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடினார். மேலும், அங்கு பணியாற்றும் அனைத்து பெண் அரசு அலுவலர்களுக்கும் மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்தார்.இந்த நிகழ்வில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலரும் கலந்து கொண்டு மகளிர் தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.



# புளியங்குடியில் என்.சி.சி (NCC) தேர்வு: சாதித்துக் காட்டிய எஸ்.வீரசாமி செட்டியார் கல்லூரி மாணவர்கள்

புளியங்குடி, மார்ச். 10-

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள எஸ்.வீரசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில், தேசிய மாணவர் படையில் (NCC) சேருவதற்கான மாணவ, மாணவியர் தேர்வு மற்றும் பயிற்சி முகாம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் இசக்கிமுத்து அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்ட இந்த அமைப்பிற்கான தேர்வு, ராஜபாளையம் NCC தலைவர் சஞ்சய் சர்மா அறிவுறுத்தலின்படி, ஒருங்கிணைப்பாளர் ராஜன் தலைமையில் நடைபெற்றது. இத்தேர்வில் நீளம் தாண்டுதல், தண்டால், ஓட்டப்பந்தயம் மற்றும் எழுத்துத் தேர்வு ஆகிய பல்வேறு கட்டங்கள் மூலம் தகுதியான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாணவர்களுக்கு தேசிய மாணவர் படையின் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. நிகழ்வில் பங்கேற்றவர்கள்:வீரசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் M. முருகையா, செயல் இயக்குநர் விக்னேஷ் வீராசாமி, வளர்ச்சி இயக்குநர் டாக்டர் ஜமால் முகமது ஜுபேர், மேலாளர் தங்கப்பன் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களை வாழ்த்தினர். மேலும் துறைத்தலைவர்கள், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.




# சேலம் மேட்டூரில் ஆதிதிராவிடர் அருந்ததியினர் நிலம் ஆக்கிரமிப்பு

சேலம் மார்ச். 10-

சேலம் மாவட்டம் மேட்டூர்மல்லிகுந்தம் கிராமம் அம்பேத்கர் நகரை சேர்ந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி தமிழ்ச்செல்வன் தலைமையில் திங்கட்கிழமையன்று

சேலம் கோட்டை மைத்தானத்தில் மேற்கண்ட அம்பேத்கர் நகரில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களும் தலைமுறை தலைமுறையாக நடக்கப் பாதையின்றி தவிக்கும் அப்பாவி அருந்ததியர் மக்களுக்கும் ஊர் அருகாமையில் அரசு நிலத்தை முறைப்படி கையகப்படுத்தியுள்ளனர் நாங்கள் இது சம்மந்தமாக தொடர்ந்து மனு அளித்தும் இதுவரை எங்களுக்கு நிலை எடுப்பு செய்து வீட்டுமனை பட்டா வழங்கவில்லை போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# வீரத் திருமகள்களைப் போற்றும் புதுச்சேரி: முப்படை வீரர்களின் குடும்பத்தினருக்குச் சிறப்பு அங்கீகாரம்



புதுச்சேரி, மார்ச். 10-

கலாம் விதைகளின் விருட்சம் சமூக இயக்கம் சார்பில், உலக மகளிர் தினத்தை முன்னிட்டு இந்திய இராணுவ வீரர்களின் இணையர்களுக்கு "வீரத்திருமகள்" விருது வழங்கும் விழா புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்குத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் முத்து தலைமை தாங்கி, 50 இராணுவ வீரர்களின் இணையர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

கலாம் விதைகளின் விருட்சம் இயக்க நிறுவனர் கவிமணி இராஜா மற்றும் முனைவர் ரேகா ஆகியோர் விழாவிற்கான நோக்கவுரையை வழங்கினர். இராணுவ வீரர்களின் குடும்பத்தினர் சமூகத்திற்குச் செய்யும் தியாகத்தைப் போற்றும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் இராணுவ வீரர்கள் சங்க நிறுவனர் சார்ஜண்ட் மோகன் முன்னிலை வகித்தார். மேனாள் காவல் கண்காணிப்பாளர் வீர.பாலகிருட்டிணன், முற்போக்குச் சிந்தனையாளர் அனிதா பாலகிருட்டிணன், பேராசிரியர் முனைவர் புவனேஸ்வரி ரகுராமன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தட்சஷிலா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் சாந்தி, கயல்விழி மற்றும் அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் தேவி உள்ளிட்டோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். இவ்விழாவில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த இராணுவ வீரர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# அதிமுகவை அழிக்கும் எடப்பாடி பழனிச்சாமி ஒன்றிய செயலாளர் இல்ல விழாவில் தனியரசு அதிரடி பேச்சு



அலங்காநல்லூர், மார்ச். 10-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஇலந்தைகுளம் கிராமத்தில், தனியரசு பேரவையின் ஒன்றியச் செயலாளர் நல்லையன் இல்லக் காதணி விழா நடைபெற்றது. விழாவில் பங்கேற்ற பேரவை தலைவர் தனியரசு, குழந்தைகளை வாழ்த்திவிட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் பேசுகையில், "தமிழக அரசு மக்களாட்சியின் இலக்கணமாகத் திகழ்கிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மகத்தான சாதனை புரிந்து வருகிறது. 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக மீண்டும் அபார வெற்றி பெறும். அதிமுகவை எடப்பாடி பழனிச்சாமி கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகிறார், அந்தக் கட்சி இப்போது பாஜகவின் கைப்பிடியில் உள்ளது. சசிகலாவின் புதிய வரவு அதிமுகவிற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தும்; வரும் காலத்தில் அதிமுக என்ற இயக்கமே இருக்காது" என்றார்.

மேலும் நடிகர் விஜய் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "சொந்தக் குடும்பத்தையே கவனித்துக்கொள்ளத் தெரியாத ஒருவர் நாட்டை ஆள நினைப்பது வேடிக்கையானது. இத்தகைய நடிகர்களுக்கு அரசியலில் எதிர்காலம் இருக்காது" என்று விமர்சித்தார். ஓ.பி.எஸ்ஸின் திமுக வருகை தென் மண்டலத்தில் திமுகவை பலப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

நிகழ்வில், மாவட்டத் தலைவர் அழகாபுரி பார்த்திபன், மாவட்டச் செயலாளர் அய்யூர்தயாளன், இளைஞரணி செயலாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சித் தலைவர் மனோஜ், செயலாளர் மோகேஷ், பொருளாளர் நாகேந்திரன், இளைஞரணி தலைவர் செல்வேந்திரன், செயலாளர் பாரதி பிரகாஷ், பொருளாளர் வெங்கட்ரமணன், வார்டு செயலாளர் சிதம்பரம், மாவேந்திரன் மற்றும் பேரவை நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



■ உலக மகளிர் தினம் தொ.அ.ஈ மருந்தகம் மேட்டூர் டேம் ( கீழ்) சேலம் மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மருத்துவர் தேவி தலைமை ஏற்றார்கள். நிகழ்ச்சி நிறைவில் நன்றியுரை பூங்கொடி, சுகாதாரத்துறை பெண் அலுவலர் சங்கம் மாவட்ட தலைவர், மாநில இணைச் செயலாளர் மற்றும் அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டார்கள். வாழ்த்துரை மற்றும் வரவேற்பு விழா ஏற்பாடு அரசு அலுவலர் ஒன்றியம் மாநில மண்டல மகளிரணி செயலர் வசுமதி விழாவுக்கு வந்திருந்த அனைத்து சகோதரிகளுக்கும் வாழ்த்துரை வழங்கினர்.



# காப்புக்காட்டில் மான் வேட்டை: சுற்றி வளைத்துப் பிடித்த வனத்துறை துப்பாக்கி, மொபட் பறிமுதல்

ஓமலூர், மார்ச். 10-

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள பொம்மியம்பட்டி காப்புக்காடு பகுதியில், டேனிஷ் பேட்டை வனச்சரக அலுவலர் விமல் குமார் தலைமையில் வனத்துறையினர் நேற்று தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அப்பகுதியில் புள்ளிமானை வேட்டையாடிய இருவரை வனத்துறையினர் கையும் களவுமாகப் பிடித்தனர். விசாரணையில், அவர்கள் தேக்கம்பட்டி பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் (28) மற்றும் இரும்பாலை பகுதியைச் சேர்ந்த சங்கர் (30) என்பதும், நாட்டுத் துப்பாக்கியால் புள்ளிமானை வேட்டையாடியதும் உறுதி செய்யப்பட்டது.*பறிமுதல் செய்யப்பட்டவை:*

வனத்துறையினர் அவர்கள் இருவரையும் கைது செய்து, அவர்களிடமிருந்து ஒரு நாட்டுத் துப்பாக்கி, வேட்டையாடப்பட்ட புள்ளி மான் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய மொபட் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

# இரட்டைக் கொலை வழக்கில் 8 பேரை கைது செய்த தனிப்படை

சென்னை, மார்ச்.10-

தாம்பரம் அடுத்த பல்லாவரம் திரிசூலம் இரட்டைக் கொலை வழக்கில் 8 பேரை தனிப்படை போலீசார் கைது செய்தனர். இரட்டைக் கொலை வழக்கில் 8 பேரை கைது செய்த தனிப்படை போலீசார் முக்கிய குற்றவாளி தீபக்கை தேடிவருகின்றனர். திரிசூலத்தில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஆறுமுகம், சந்தோஷ் நள்ளிரவில் மர்மகும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000